

இறங்கினார். ஆனால் உள்ளூர் மக்களின் எதிர்ப்பால் நிலை குலைந்து போனார் நித்யானந்தா. பிறகு எலும்பு முறிவு டாக்டர் ஒருவர், பஸ் ஓனர் ஒருவர், ரைஸ் மில் ஓனர் ஒருவர், நகைக்கடை அதிபர் ஒருவர் ஆகிய நான்கு பேரின் உதவியுடன் திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் பிரம்மாண்ட ஆஸ்ரமம் ஒன்றைத் துவங்கினார். அதன் பிறகுதான் உள்ளூர் பிரமுகர்கள் ஆஸ்ரமத்துக்கு வரத் துவங்கினார்கள்.

அந்த ஆஸ்ரமத்தில் மூலிகைகளால் ஆன 1008 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதில் நடிகர் விஜய்யுடன், அவரது தந்தை சந்திரசேகரும் இந்த ஆஸ்ரமத்தில் ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக நடந்த விழாவில் நடிகர் விஜய்யின் தாயார் ஷோபாவும் ஆஸ்ரமத்துக்கு வந்துள்ளார்.

நித்யானந்தாவின் ஆன்மீகப் பாதைக்குத் துணையாக இருந்தவர் அவரது சொந்தத் தாத்தாவான ராஜி முதலியார்தான்! ஒரு முறை பெரிய ஆன்மீகவாதியான பெருமையில் நித்யானந்தாவை வீட்டிற்கு வரவழைத்து அவரது சொந்தத் தாத்தாவே அவருக்கு பாத பூஜை செய்துள்ளார். ஆனால் தாத்தாவின் இறுதி நாள் அன்று, ‘அஞ்சலி செலுத்த வருவார்’ என எல்லோரும் காத்திருந்தும் நித்யானந்தா கடைசி வரை வரவில்லை. இது திருவண்ணாமலை பகுதியில் பெரும் சர்ச்சையானது. அத்துடன் நித்யானந்தாவிற்கும், அவரது சொந்த பந்தத்திற்கும் இருந்த உறவுகளும் சுத்தமாக அறுந்து போய்விட்டன.

கடைசியாக தனது தந்தை அருணாசலம் மரணமடைந்தபோது திருவண்ணாமலை வந்தார் நித்யானந்தா. ‘தந்தையார் சவத்தை வைத்து யாரும் அழக் கூடாது’ என்றபடி நான்கு நாட்கள் பஜனைப் பாட்டைபாடி முடித்தார். ஒப்பாரி இல்லாமல் பஜனை மட்டுமே தன் தந்தையின் மரணத்தில் பாடினார். இதன் பிறகு தனது சகோதரர்கள் செந்தில், கோபி மற்றும் தன் தாயார் என மூன்று பேரையும் பெங்களூர் ஆஸ்ரமத்திற்கே, கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பு அழைத்துப் போய்விட்டார்.



மணி

மிகச் செல்வாக்காக வாழ்ந்த நித்யானந்தாவின் தந்தை அருணாசலம், தன் கடைசி நாட்களில் திருவண்ணாமலை மெயின் பஜாரில் இருந்த ஹோட்டல் ஒன்றில் 700 ரூபாய் சம்பளத்துக்கு பில்போடும் வேலை செய்தார் என்பது வேதனையான